



SRIRANGAM SRIMATH ANDAVAN ASHRAMAM

SHANTI MEDU, VEERAPANDI PIRIVU, MTP ROAD,COIMBATORE

# Thondaradippodi Azhwar

## Thirunakshatram on 9.1.2024



ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் மண்டங்குடி
அவதாரம் மார்கழி கேட்டை

- Meaning "the Dust at the feet of Bhagavatals"
- Born to a vedic brahmin by name, vedavisarathar in Thirumandangudi
- in the month of Margazhi and in "kEttai" nakshathram,
- in the family of sOzhiya vaishnava (who had their "kudumi" (tuft) on the top front portion and not behind);
- An incarnation of vanamAlA (Divine Garland of Lord Maha vishnu) and he was named "Vipranarayana".
- Learnt Tamil, Sanskrit, vedas, upanishds, etc., at an early age
- He mastered them with no effort and shone like a bright tEjasvi.
- He was also well versed in writing and singing Tamil poetry
- He was fully well versed in Shastras.

- He had no pride (vidhya garvam) and was humble and modest to the core and hence, he was respected by everyone in the locality.
- Highly devoted to Sriman Narayana
- A bachelor throughout his life.
- Like periyAzhwAr, Vipranarayana too was interested only in poomalai kainkaryam.
- He migrated to Srirangam (which he was longing to visit) after his father's death) and he made a beautiful nandhavanam
- our Vipranarayanan sang pAsurams in praise of Arangan
- He addresses the Lord:"O Achutha! There is no enjoyment which is equal to admiring your such beauty. Even you give me a post of Indra to rule the Indra lokam and enjoy that position, I still DO NOT NEED them; I just want to serveat your feet!". Such a great AzhwAr he was.
- The Lord wanted some fun (Leela krishnan); One day, two sisters were coming back after performing a dance performance in front of Chozha king and were attracted by the beauty of our AzhwAr's nandhavanam. When they saw him closing his eyes and meditating on the Lord, they were captivated by his tEjas and charm. He ignored their beauty.
- Especially the more beautiful younger sister, by name devadevi got more offended and in fact, challenged the other sister that she would make our AzhwAr her slave with her beauty. In spite of her sister's warning and caution not to enter into such an apacharam and endanger herself, deva devi was adamant and decided to embark on it. Disguised and dressed as a sannyasini, she requested him to accept her service to him at his place. Unaware of the plot, he agreed; However he did not let her stay inside his hermitage. He maintained the distance and was as usual performing his kainkaryams unaffected by her presence. She was desperate and felt sad that she was getting nowhere near her vow. One day, when it rained heavily she got drenched and was shivering. Vipranarayana could not say no for her coming into his hermitage (which he avoided till then) and devadevi slowly aroused his sensual desires and our poor Vipranarayanar was hooked!. She virtually made him a slave for her beauty and he forgot all sorts of kainkaryam and singing. His thoughts were only about devadevi and he became so engrossed in his desire for her that he could not bear even a moment separation from her.
- When she achieved what she wished, she went back to her place in uttamarkoil (near SriRangam). Her mother did not allow Vipranarayana to see her unless he brought some money, true to their profession (which he did not have naturally).
- Vipranarayana felt isolated and was heavily lamenting the separation from devadevi and did not know what to do. In the meanwhile, our Lord Tiruvarangan felt it was enough for Him to play with His bhakta and hence, appeared as a servant of Vipranarayana calling Himself "Azhagiya manavala dasan" and went to deva devi's house. He handed over the Big Golden vessel (Thanga vattil) saying that Vipranarayana asked him to give this to her. devadevi's mother went in search of our Vipranarayanar and let him meet her daughter(without telling him why she allowed now; AzhwAr, too did not ask). Next morning, the archakas found one of the "vattils" missing in the Lord's Sannidhi and immediately informed the king. The servant maid of deva devi informed in the meanwhile other homes where she used to work for about this Golden vattil in deva devi's house and the news reached the king. The king after knowing the story arrested our Vipranarayanar without listening to his pleas that he was not at all

aware of any Golden vattil; nor did he have any servant working for him, since he himself was so poor. No amount of request or plea helped and he landed up in a dark cell! There he realised everything; his mistakes, his follies, his apacharams of not performing kainkaryams to the Lord etc..

- The Lord appeared in the king'd dream and narrated the whole incident and said that Vipranarayana, His dearest Bhakta, was innocent and he was at no fault at all.
- Immediately, the king released Vipranarayana and prostrated at his feet and begged for his pardon. Vipranarayana felt greatly moved by the Lord's mercy and daya and sang pAsurams full of bhakti .
- Having gone through a traumatic experience with devadevi, he never looked back and since then, he became a staunch bhakta and called himself the dust at the feet of bhakas (ThoNdaradippodi AzhwAr).
- His works comprised of Thirumalai (a garland for the Lord) and ThiruppaLLiyezhucchi (waking up the Lord).
- His pAsurams are really excellent marvellous compositions and one is certain to get moved by the bhakti and longing for the Lord Ranganatha.
- He sang only in praise of SriRangan.
- One of his best pasurams:

*ஊரிலேன் காணியில்லை , உறவு மற்றொருவரில்லை* *
*பாரில்நின் பாதமூலம் , பற்றிலேன் பரமமூர்த்தி*! **
*காரொளிவண்ணனே*! , *கண்ணனே*! *கதறுகின்றேன்* *
*ஆருளர்களைகண்*? *அம்மா* ! , *அரங்கமாநகருளானே* ! 29


"OorilEn kANiyillai; uRavu maRRu oruvar illai;/
pAril nin pAtha moolam paRRilEn parama moorthee;/
kAroLi vaNNanE (en) kaNNanE! kadharuginREn;/
AruLar kaLaikaN ammA! arngamA nagaruLAnE!/"

Meaning:

I have no place; no properties; no relatives; none other than you; I know only your Lotus feet; O Lord of Blue hued sky colour! You only are my refuge. Can you not hear my cries? Is there anyone else to save me except you?"

**ThoNdaradippodiAzhwAr thiruvadigaLe saraNam**

| **Thirupalliyezhuchi**<br>**For Daily Recitation**<br>**Total No. of pasurams :: 10**<br><br>**Please see annexure 1 for the pasurams** |
|---|
| **Thirumaalai**<br>**Total No.of Pasurams 45**<br><br>**Please see annexure 2 for the pasurams** |



ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் மண்டங்குடி
அவதாரம் மார்கழி கேட்டை

# தொண்டரடிப்பொடியாழ்வார்

அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி

**தனியன்கள்**

**तमेव मत्वा परवासुदेवं**
**रङ्गेशयं राजवदर्हणीयम् ।**
**प्राबोधिकीं योऽकृत सूक्तिमालां**
**भक्ताङ्घ्रिरेणुं भगवन्तमीडे ॥**

தமேவ மத்வா பரவாஸுதே3வம்
ரங்கே3ஶயம் ராஜவத3ர்ஹணீயம் ।
ப்ரபோ3த4கீம் யோऽக்ருத ஸூக்திமாலாம்
ப4க்தாங்க்4ரி ரேணும் ப4க3வந்தமீடே3 ॥

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர் *
தொண்டரடிப்பொடி தொன்னகரம் *
வண்டுதிணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப் *
பள்ளிஉணர்த்தும் பிரானுதித்தவூர்.

§ கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் ,
கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய் *
மது விரிந்தொழுகின மாமலரெல்லாம் ,
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி **
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த ,
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும் *
அதிர்தலில் அலைகடல் போன்றுளதெங்கும் ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக் ,
கூர்ந்தது குணதிசை மாருதம்இதுவோ *
எழுந்தன மலரணைப் பள்ளிகொள்ளன்னம் ,
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிறகுதறி **
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய் ,
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி *
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 2

சுடரொளி பரந்தன சூழ்திசையெல்லாம் ,
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப் *
படரொளி பசுத்தனன் பனிமதிஇவனோ ,
பாயிருளகன்றது பைம்பொழிற்கமுகின் **
மடலிடைக்கீறி வண்பாளைகள் நாற ,
வைகறை கூர்ந்தது மாருதம்இதுவோ *
அடலொளி திகழ்தரு திகிரியந்தடக்கை ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 3

மேட்டிளமேதிகள் தளைவிடும் ஆயர்கள் ,
வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும் *
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள் ,
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை **
வாட்டிய வரிசிலை வானவரேறே ! ,
மாமுனி வேள்வியைக்காத்து * அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம்மரசே ! ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே. 4

புலம்பினபுட்களும் பூம்பொழில்களின்வாய் ,
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி *
கலந்தது குணதிசைக் கனைகடலரவம் *
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த **
அலங்கலந்தொடையல்கொண்டு அடியிணை பணிவான்,
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா *
இலங்கையர்கோன் வழிபாடு செய்கோயில் ,
எம்பெருமான் ! பள்ளியெழுந்தருளாயே. 5

இரவியர் மணிநெடுந்தேரொடும் இவரோ? ,
இறையவர் பதினொரு விடையரும்இவரோ? *
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ ? ,
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி **
புரவியோடு ஆடலும் பாடலும்தேரும் ,
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம் *
அருவரையனையநின் கோயில்முன்இவரோ?,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 6

அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ ? ,
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ? *
இந்திரனானையும் தானும் வந்திவனோ? ,
எம்பெருமான்! உன்கோயிலின் வாசல் **
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க ,
இயக்கரும் மயங்கினர் திருவடித்தொழுவான் *
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ? ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க ,
மாநிதி கபிலைஒண் கண்ணாடிமுதலா *
எம்பெருமான் படிமக்கலங் காண்டற்கு ,
ஏற்பனவாயின கொண்டு நன்முனிவர் **
தும்புருநாரதர் புகுந்தனர் இவரோ? ,
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி *
அம்பர தலத்தினின்று அகல்கின்றது இருள்போய் ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 8

§ ஏதமில் தண்ணுமை எக்கம்மத்தளி ,
யாழ்குழல் முழவமோடு இசைதிசைகெழுமி *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் ,
கந்தருவர் அவர் கங்குலுள்எல்லாம் **
மாதவர் வானவர் சாரணர் இயக்கர் ,
சித்தரும் மயங்கினர் திருவடிதொழுவான் *
ஆதலில் அவர்க்கு நாளோலக்கம் அருள ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 9

§ கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தன இவையோ? ,
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ? *
துடியிடையார் சுரிகுழல் பிழிந்துதறிக் ,
துகிலுடுத்தேறினர் சூழ்புனல் அரங்கா **
தொடையொத்த துளவமும் கூடையும்பொலிந்து,
தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை * அளியன் என்றருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய் ! , பள்ளி எழுந்தருளாயே ! 10





*தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த*

# திருமாலை

***தனியன்***

***(திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச்செய்தது)***

**மற்றொன்றும்வேண்டா மனமே மதிளரங்கர் ***
**கற்றினம்மேய்த்த கழலிணைக்கீழ் * உற்ற**
**திருமாலைப்பாடும்சீர்த் தொண்டரடிப்பொடியெம் ***
**பெருமானை எப்பொழுதும்பேசு.**

**§ காவலில் புலனை வைத்துக் , கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து ***
**நாவலிட்டு உழிதருகின்றோம் , நமன்தமர் தலைகள்மீதே ****
**மூவுலகுண்டுமிழ்ந்த , முதல்வ!நின்நாமம்கற்ற ***
**ஆவலிப்புடைமை கண்டாய் , அரங்கமாநகருளானே !** 1

**§ பச்சைமாமலைபோல்மேனி , பவளவாய் கமலச்செங்கண் ***
**அச்சுதா! அமரரேறே ! , ஆயர்தம் கொழுந்தே!என்னும் ****
**இச்சுவைதவிர யான்போய் , இந்திரலோகம்ஆளும் ***
**அச்சுவைபெறினும்வேண்டேன் , அரங்கமாநகருளானே !** 2

**வேதநூல்பிராயம்நூறு , மனிசர்தாம் புகுவரேலும் ***
**பாதியும்உறங்கிப்போகும் , நின்றதில் பதினையாண்டு ****
**பேதைபாலகனதாகும் , பிணிபசிமூப்புத்துன்பம் ***
**ஆதலால் பிறவிவேண்டேன் , அரங்கமாநகருளானே !** 3

**மொய்த்தவல்வினையுள் நின்று , மூன்றெழுத்துடையபேரால் ***
**கத்திரபந்துமன்றே , பராங்கதிகண்டுகொண்டான் ****
**இத்தனை அடியரானார்க்கு , இரங்கும்நம்அரங்கனாய ***
**பித்தனைப்பெற்றும்அந்தோ ! , பிறவியுள்பிணங்குமாறே.** 4

**பெண்டிரால் சுகங்களுய்ப்பான் , பெரியதோர்இடும்பைபூண்டு ***
**உண்டுஇராக்கிடக்கும்போது , உடலுக்கே கரைந்துநைந்து ****
**தண்துழாய்மாலைமார்பன் , தமர்களாய்ப்பாடியாடி ***
**தொண்டு பூண்டமுதமுண்ணாத் , தொழும்பர்சோறு உகக்குமாறே ?** 5

மறம்சுவர் மதிளெடுத்து , மறுமைக்கே வெறுமைபூண்டு *
புறம் சுவரோட்டைமாடம் , புரளும்போது அறியமாட்டீர் **
அறம்சுவராகிநின்ற , அரங்கனார்க்குஆட்செய்யாதே *
புறஞ்சுவர்கோலஞ்செய்து , புள்கௌவக்கிடக்கின்றீரே 6

புலையறமாகிநின்ற , புத்தொடுசமணமெல்லாம் *
கலையறக்கற்றமாந்தர் , காண்பரோகேட்பரோதாம்? **
தலையறுப்புண்டும்சாவேன் , சத்தியம்காண்மின்ஐயா *
சிலையினால்இலங்கைசெற்ற , தேவனே தேவனாவான் 7

வெறுப்பொடு சமணர்முண்டர் , விதியில்சாக்கியர்கள் *
நின்பால் பொறுப்பரியனகள் பேசில் , போவதே நோயதாகி **
குறிப்பெனக்கடையுமாகில் , கூடுமேல் தலையைஆங்கே *
அறுப்பதேகருமம்கண்டாய் , அரங்கமாநகருளானே 8

மற்றுமோர் தெய்வமுண்டே , மதியிலா மானிடங்காள் *
உற்றபோதன்றி நீங்கள் , ஒருவனென்று உணரமாட்டீர் **
அற்றமேல் ஒன்றறியீர் , அவனல்லால் தெய்வமில்லை *
கற்றினம்மேய்த்தஎந்தை , கழலிணை பணிமின் நீரே 9

நாட்டினான் தெய்வம்எங்கும் , நல்லதோரருள்தன்னாலே *
காட்டினான்திருவரங்கம் , உய்பவர்க்கு உய்யும்வண்ணம் **
கேட்டிரே நம்பிமீர்காள்! , கெருடவாகனனும்நிற்க *
சேட்டைதன்மடியகத்துச் , செல்வம் பார்த்திருக்கின்றீரே 10

ஒருவில்லால் ஓங்குமுந்நீரடைத்து , உலகங்களுய்ய *
செருவிலேஅரக்கர்கோனைச் , செற்ற நம்சேவகனார் **
மருவியபெரியகோயில் , மதிள்திருவரங்கமென்னா *
கருவிலே திருவிலாதீர்! , காலத்தைக்கழிக்கின்றீரே 11

நமனும்முற்கலனும்பேச , நரகில் நின்றார்கள் கேட்க *
நரகமே சுவர்க்கமாகும் , நாமங்களுடைய நம்பீ **
அவனதூர் அரங்கமென்னாது , அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர் *
கவலையுள்படுகின்றாரென்று , அதனுக்கே கவல்கின்றேனே 12

எறியுநீர் வெறிகொள்வேலை , மாநிலத்து உயிர்களெல்லாம் *
வெறிகொள் பூந்துளவமாலை , விண்ணவர் கோனையேத்த **
அறிவிலா மனிசரெல்லாம் , அரங்கம் என்றழைப்பாராகில் *
பொறியில்வாழ் நரகமெல்லாம் , புல்லெழுந்தொழியுமன்றே 13

§ வண்டினம்முரலும்சோலை , மயிலினம்ஆலும்சோலை *
கொண்டல்மீதணவும்சோலை , குயிலினம்கூவும்சோலை **
அண்டர்கோன்அமரும்சோலை , அணிதிருவரங்கமென்னா
மிண்டர்பாய்ந்துண்ணும் சோற்றைவிலக்கி , நாய்க்குஇடுமினீரே 14

மெய்யர்க்கே மெய்யானாகும் , விதியிலா என்னைப்போல *
பொய்யர்க்கே பொய்யனாகும் , புட்கொடியுடையகோமான் **
உய்யப்போம் உணர்வினார்கட்கு , ஒருவனென்று உணர்ந்தபின்னை *
ஐயப்பாடறுத்துத்தோன்றும் , அழகனூர்அரங்கமன்றே 15

சூதனாய்க்கள்வனாகித் , தூர்த்தரோடு இசைந்தகாலம் *
மாதரார் கயற்கணென்னும் , வலையுள் பட்டமுந்துவேனை **
போதரேயென்று சொல்லிப் , புந்தியுள் புகுந்து * தன்பால்
ஆதரம்பெறுகவைத்த , அழகனூர்அரங்கமன்றே 16

விரும்பிநின்றேத்தமாட்டேன் ,விதியிலேன் மதியொன்றில்லை *
இரும்புபோல் வலியநெஞ்சம் , இறையிறை உருகும்வண்ணம் **
சுரும்பமர்சோலைசூழ்ந்த , அரங்கமாகோயில்கொண்ட *
கரும்பினைக்கண்டுகொண்டு , என்கண்ணிணை களிக்குமாறே ! 17

இனிதிரைத்திவலைமோத , எறியும்தண்பரவைமீதே *
தனிகிடந்துஅரசுசெய்யும் ,தாமரைக்கண்ணன்எம்மான் **
கனியிருந்தனையசெவ்வாய்க் , கண்ணனைக்கண்டகண்கள் *
பனியரும்பு உதிருமாலோ ! , என்செய்கேன்பாவியேனே 18

§ குடதிசைமுடியைவைத்துக் , குணதிசை பாதம்நீட்டி *
வடதிசை பின்புகாட்டித் , தென்திசைஇலங்கைநோக்கி **
கடல்நிறக் கடவுளெந்தை , அரவணைத் துயிலுமாகண்டு *
உடலெனக்கு உருகுமாலோ , என்செய்கேன்?உலகத்தீரே! 19

பாயும் நீரரங்கந்தன்னுள் , பாம்பணைப்பள்ளிகொண்ட *
மாயனார் திருநன்மார்வும் , மரகதவுருவும்தோளும் **
தூயதாமரைக்கண்களும் , துவரிதழ்ப்பவளவாயும் *
ஆயசீர்முடியும்தேசும் , அடியரோர்க்குஅகலலாமே? 20

பணிவினால் மனமதொன்றிப் , பவளவாயரங்கனார்க்கு *
துணிவினால் வாழமாட்டாத் , தொல்லைநெஞ்சே! நீசொல்லாய் **
அணியினார் செம்பொனாய , அருவரையனைய கோயில் *
மணியனார் கிடந்தவாற்றை , மனத்தினால் நினைக்கலாமே.? 21

பேசிற்றே பேசலல்லால் , பெருமையொன்று உணரலாகாது *
ஆசற்றார் தங்கட்கல்லால் , அறியலாவானும் அல்லன் **
மாசற்றார் மனத்துளானை , வணங்கிநாம்இருப்பதல்லால் *
பேசத்தானாவதுண்டோ , பேதைநெஞ்சே! நீசொல்லாய் 22

கங்கையின்புனிதமாய , காவிரிநடுவுபாட்டு *
பொங்குநீர் பரந்துபாயும் , பூம்பொழிலரங்கந்தன்னுள் **
எங்கள்மால் இறைவன்ஈசன் , கிடந்ததோர்கிடக்கைகண்டும் *
எங்ஙனம்மறந்துவாழ்கேன்? , ஏழையேன்ஏழையேனே 23

வெள்ளநீர் பரந்துபாயும் , விரிபொழிலரங்கந்தன்னுள் *
கள்வனார் கிடந்தவாறும் , கமலநன்முகமும்கண்டும் **
உள்ளமே! வலியைபோலும், ஒருவனென்று உணரமாட்டாய் *
கள்ளமேகாதல்செய்து , உன்கள்ளத்தே கழிக்கின்றாயே 24

குளித்து மூன்றனலையோம்பும் , குறிகொள் அந்தணமைதன்னை
ஒளித்திட்டேன் என்கணில்லை, நின்கணும் பத்தனல்லேன்**
களிப்பதென்கொண்டு? நம்பி! , கடல்வண்ணா! கதறுகின்றேன் *
அளித்தெனக்கருள்செய்கண்டாய்,அரங்கமாநகருளானே! 25

போதெல்லாம்போதுகொண்டு , உன்பொன்னடி புனையமாட்டேன் *
தீதிலாமொழிகள்கொண்டு , உன்திருக்குணம் செப்பமாட்டேன் **
காதலால்நெஞ்சம்அன்பு , கலந்திலேன்அதுதன்னாலே *
ஏதிலேன்அரங்கர்க்குஎல்லே! , என்செய்வான் தோன்றினேனே? 26

குரங்குகள் மலையை நூக்கக் , குளித்துத்தாம் புரண்டிட்டோடி *
தரங்கநீர் அடைக்கலுற்ற , சலமிலாஅணிலும்போலேன் **
மரங்கள்போல் வலியநெஞ்ச , வஞ்சனேன்நெஞ்சுதன்னால் *
அரங்கனார்க்கு ஆட்செய்யாதே , அளியத்தேன்அயர்க்கின்றேனே 27

உம்பரால்அறியலாகா , ஒளியுளார்ஆனைக்காகி *
செம்புலால் உண்டுவாழும் , முதலைமேல் சீறிவந்தார் **
நம்பரமாயதுண்டே? , நாய்களோம் சிறுமையோரா *
எம்பிராற்கு ஆட்செய்யாதே , என்செய்வான் தோன்றினேனே? 28

ஊரிலேன் காணியில்லை , உறவு மற்றொருவரில்லை *
பாரில்நின் பாதமூலம் , பற்றிலேன் பரமமூர்த்தி! **
காரொளிவண்ணனே! , கண்ணனே! கதறுகின்றேன் *
ஆருளர்களைகண்? அம்மா ! , அரங்கமாநகருளானே ! 29

மனத்தில்ஒர்தூய்மையில்லை , வாயில்ஒர் இன்சொலில்லை *
சினத்தினால்செற்றம்நோக்கித் , தீவிளி விளிவன்வாளா **
புனத்துழாய்மாலையானே ! , பொன்னிசூழ்திருவரங்கா ! *
எனக்கு இனிக்கதியென்சொல்லாய் ,என்னையாளுடையகோவே ! 30

தவத்துளார் தம்மிலல்லேன் , தனம் படைத்தாரிலல்லேன் *
உவர்த்தநீர்போல , என்தன் உற்றவர்க்கொன்றும் அல்லேன் **
துவர்த்த செவ்வாயினார்க்கே , துவக்கறத் துரிசனானேன் *
அவத்தமே பிறவிதந்தாய் , அரங்கமாநகருளானே 31

ஆர்த்துவண்டலம்பும்சோலை , அணிதிருவரங்கந்தன்னுள் *
கார்த்திரளனையமேனிக் , கண்ணனே! உன்னைக்காணும் **
மார்க்கமொன்றறிய மாட்டா , மனிசரில் துரிசனாய *
மூர்க்கனேன் வந்துநின்றேன் , மூர்க்கனேன் மூர்க்கனேனே 32

மெய்யெல்லாம் போகவிட்டு , விரிகுழலாரில்பட்டு *
பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட, போழ்க்கனேன்வந்துநின்றேன் **
ஐயனே! அரங்கனே! , உன்னருளென்னும் ஆசைதன்னால் *
பொய்யனேன் வந்துநின்றேன் , பொய்யனேன் பொய்யனேனே 33

உள்ளத்தேயுறையும் மாலை , உள்ளுவான் உணர்வொன்றில்லா *
கள்ளத்தேன் நானும்தொண்டாய்த் , தொண்டுக்கே கோலம்பூண்டு *
உள்ளுவார் உள்ளிற்றெல்லாம், உடனிருந்து அறிதியென்று *
வெள்கிப்போய் என்னுள்ளேநான் , விலவறச் சிரிதிட்டேனே 34

தாவிஅன்றுஉலகமெல்லாம் , தலைவிளாக்கொண்டஎந்தாய் ! *
சேவியேன் உன்னையல்லால் , சிக்கெனச்செங்கண்மாலே ! **
ஆவியே ! அமுதே ! , என்தன் ஆருயிரனையஎந்தாய் *
பாவியேன் உன்னையல்லால் , பாவியேன்பாவியேனே 35

மழைக்குஅன்று வரைமுனேந்தும் , மைந்தனே ! மதுரவாறே ! *
உழைக்கன்றேபோல , நோக்கமுடையவர் வலையுள்பட்டு **
உழைக்கின்றேற்கு , என்னை நோக்காதொழிவதே ! * உன்னையன்றே
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி! , அரங்கமாநகருளானே 36

தெளிவிலாக் கலங்கல்நீர்சூழ் , திருவரங்கத்துளோங்கும் *
ஒளியுளார் தாமேயன்றே , தந்தையும் தாயுமாவார் **
எளியதோர் அருளுமன்றே , என்திறத்து எம்பிரானார் *
அளியன்நம்பையல்என்னார் , அம்மாவோ! கொடியவாறே 37

§ மேம்பொருள் போகவிட்டு , மெய்ம்மையை மிகஉணர்ந்து *
ஆம்பரிசறிந்துகொண்டு , ஐம்புலனகத்தடக்கி **
காம்பறத்தலைசிரைத்து , உன்கடைத்தலையிருந்துவாழும் *
சோம்பரை உகத்திபோலும் , சூழ்புனலரங்கத்தானே 38

அடிமையில் குடிமையில்லா , அயல்சதுப்பேதிமாரில் *
குடிமையில் கடைமைபட்ட , குக்கரில் பிறப்பரேலும் **
முடியினில் துளபம்வைத்தாய்!, மொய்கழற்கு அன்புசெய்யும்*
அடியரை உகத்திபோலும் , அரங்கமாநகருளானே ! 39

திருமறுமார்வ! நின்னைச் , சிந்தையுள் திகழவைத்து *
மருவிய மனத்தராகில் , மாநிலத்து உயிர்களெல்லாம் **
வெருவரக்கொன்றுசுட்டிட்டு , ஈட்டியவினையரேலும் *
அருவினைப்பயனதுய்யார் , அரங்கமாநகருளானே! 40

**வானுளார் அறியலாகா , வானவா என்பராகில் ***
**தேனுலாம் துளபமாலைச் , சென்னியாய் என்பராகில் ****
**ஊனமாயினகள் செய்யும் , ஊனகாரகர்களேலும் ***
**போனகம்செய்தசேடம் , தருவரேல் புனிதமன்றே** 41

**பழுதிலா வொழுகலாற்றுப் , பலசதுப்பேதிமார்கள் ***
**இழிகுலத்தவர்களேலும் , எம்அடியார்களாகில் ****
**தொழுமினீர்கொடுமின்கொண்மின்என்று , நின்னோடும்ஒக்க ***
**வழிபடஅருளினாய்போல் , மதிள் திருவரங்கத்தானே !** 42

**அமரவோரங்கமாறும் , வேதமோர் நான்கும்ஓதி ***
**தமர்களில்தலைவராய , சாதிஅந்தணர்களேலும் ****
**நுமர்களைப்பழிப்பராகில் , நொடிப்பதோர்அளவில் * ஆங்கே**
**அவர்கள்தாம்புலையர்போலும் , அரங்கமாநகருளானே!** 43

**§ பெண்ணுலாம் சடையினானும் , பிரமனும் உன்னைக்காண்பான்**
**எண்ணிலா ஊழியூழி , தவம்செய்தார் வெள்கிநிற்ப ****
**விண்ணுளார் வியப்பவந்து , ஆனைக்குஅன்று அருளையீந்த**
**கண்ணறா! * உன்னையென்னோ? , களைகணாக்கருதுமாறே** 44

**§ வளவெழும்தவளமாட , மதுரைமாநகரந்தன்னுள் ***
**கவளமால்யானைகொன்ற , கண்ணனைஅரங்கமாலை ****
**துளவத்தொண்டாயதொல்சீர்த் , தொண்டரடிப்பொடிசொல் ***
**இளையபுன்கவிதையேலும் , எம்பிராற்குஇனியவாறே** 45

அடிவரவு:: காவல் பச்சை வேதம் மொய்த்த பெண்டிர் மறம் புலை வெறுப்பொடு மற்றும் நாட்டினான் ஒரு நமனும் எறியும் வண்டினம் மெய் சூதன் விரும்பி இனிது குட பாயும் பணி பேசு கங்கை வெள்ளம் குளித்து போது குரங்கு உம்பர் ஊர் மனம் தவம் ஆர்த்து மெய் உள்ளம் தாவி மழை தெளிவு மேம்பொருள் அடிமை திரு வான் பழுதிலா அமர பெண் வளவெழும் கதிர்

## தொண்டரடிப்பொடியாழ்வார்
## திருவடிகளே சரணம்!